# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 01 / மூன்றாந் தவணை – இரண்டாம் வாரம் ( $L_7$ $S_7$ $R_7$ $W_7$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

## I. செவிமெடுத்தல்.

01). பாடநூலில் தரப்பட்டுள்ள ஆத்திச்சூடியைச் சரியான உச்சரிப்புடன் ( பெற்றோர் ) வாசித்துக் காட்டுங்கள். பல தடவைகள் பிள்ளைகள் தெளிவாக கேட்கும் வகையில் வாசித்து செவிமடுக்கச் செய்யுங்கள்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

02). உயிர் எழுத்துக்களை ஒவ்வொன்றாக உச்சரித்து பாடலாகச் சொல்லிக் கொடுங்கள்.

**எடுத்துக்காட்டு** - அ – அறம் செய விரும்பு

ஆ – ஆறுவது சினம்

இ - இயல்வது கரவேல்

03). முடியுமாயின் மாதக் கலண்டரின் பின்பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் ஆத்திச்சூடியை உறுப்பமைய எழுதி காட்சிப்படுத்தி, பிள்ளைகளை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

- சொற்களஞ்சிய விருத்திக்காகவும் நா நெகிழ், நா பிறழ் ( நாக்கு ) பயிற்சிக்காகவும் என்பதை நினைவிற் கொண்டு மனனம் செய்து கொள்ள வழிகாட்டுங்கள்.

04). எழுத்துப் பயிற்சிக்காக ஆத்திச்சூடி வரிகளில் வெற்றிடங்களில் வரவேண்டிய சொற்களை அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுதவும், வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.

i). அறம் செய .................
ii). ................. சினம்
iii). இயல்வது ..................
iv). ............... விலக்கேல்
v). உடையது .................
vi). ................ கைவிடேல்
vii). எண் எழுத்து ...............
viii). ................. இகழ்ச்சி
ix). ஐயம் ...............
x). ................. ஒழுகு
xi). ஓதுவது .................
xii). ................பேசேல்